# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 9/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. டேனியல் **Rw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of July 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஆலங்குளத்தில் வசித்துவருகிறேன். விபத்து சமயத்தில் லிங்கம் பீடி கம்பெனியில் ஓட்டுநராக வேலை பார்த்துவந்தேன். விபத்து சம்பந்தமாக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 20.08.2021 அன்று காலை 08.15 மணிக்கு நான் தென்காசியிலிருந்து TN-76-P-3312 என்ற தோஸ்த் வாகனத்தில் ஆலங்குளத்திற்கு சாலையில் மெதுவாக சென்றுகொண்டிருந்தேன். அப்போது திருநெல்வேலி – தென்காசி ரோட்டில் அடைக்கலப்பட்டணம் தாண்டி வட்டலூர் பகுதியில் வந்தபோது, எதிர்திசையில் இருந்து வந்த ஒரு இருசக்கர வாகனம் ரோட்டில் அமைக்கப்பட்டிருந்த தடுப்புகளை தாண்டும்போது வட்டலூர்

ஊரிலிருந்து வந்த மற்றொரு இருசக்கர வாகனத்தில் குடும்பத்துடன் வந்த ஒரு நபரின் இருசக்கர வாகனமும் பேரிகார்டு அருகே மோதிக்கொண்டது. அதன் காரணமாக எதிர்திசையில் இருந்து வந்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டு நான் ஓட்டி சென்ற தோஸ்த் வாகனத்தில் மோதிவிட்டார். இந்த விபத்திற்கு காரணம் வட்டலூர் ஊரிலிருந்து குடும்பத்துடன் வந்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம். இந்த விபத்திற்கு நான் எவ்வகையிலும் காரணம் கிடையாது.

விபத்து சம்பந்தமாக போலீசார் என் மீதுதான் வழக்கு போட்டார்கள் ஏன் எனில் என்னுடைய வாகனம்தான் பெரிய வாகனம் என்று சொல்லி வழக்கு போட்டுவிட்டார்கள். அந்த குற்ற வழக்கு ஆலங்குளம் நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருந்து வருகிறது. இந்த விபத்திற்கு நான் காரணம் கிடையாது.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சமயத்தில் எனது ஓட்டுநர் உரிமம் ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான் தான் குற்றவாளியாக காட்டப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். இறுதி அறிக்கையிலும் நான் தான் குற்றவாளியாக காட்டப்பட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவங்கள் குறித்து எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்கு மற்றும்இறுதி அறிக்கை சம்பந்தமாக நான் காவல் உயரதிகாரிகளிடம் உரிய புகார் கொடுத்து மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும் அதிவேகமும்தான் காரணம் என புலன்விசாரணையில் தெரியவந்த காரணத்தினால் போலீசார் என்மீது இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் குற்ற இறுதி அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்சரியல்ல. விபத்து

என்னுடைய கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஓட்டி சென்ற வாகனம் அசோக் லேலண்ட் தோஸ்த் வாகனம் என்றால் சரிதான். அது அதிவேகமாக செல்லக்கூடிய வாகனம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவங்கள் குறித்து எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்கு மற்றும்இறுதி அறிக்கை சம்பந்தமாக நான் காவல் உயரதிகாரிகளிடம் உரிய புகார் கொடுத்து மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும் அதிவேகமும்தான் காரணம் என புலன்விசாரணையில் தெரியவந்த காரணத்தினால் போலீசார் என்மீது இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் குற்ற இறுதி அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi
Date: 2025.07.16 17:28:46 +0530